Drop out of Students in Senior Sec. Edu.

# சிரேஷ்ட இடைநிலைக் கல்விபெறும் மாணவரின் இடைவிலகல்

(காத்தான்குடிக் கோட்டம்)

Sharifdeen, Sultan

சுல்தான் சரீப்தீன் B.A, Dip. in Edu.

(பதிவு இல : 10007534)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் கல்வி முதுமாணிக் கற்கை நெறிக்கான பகுதித் தேவையை நிறைவு செய்வதற்காக இந்த ஆய்வு சமர்ப்பிக்கப்படுகின்றது.

OPEN UNIVERSITY
66963

கல்விப் பீடம்
இலங்கை திறந்த பல்கலைக் கழகம்.
இலங்கை.

2005

66963

# ஆய்வுச் சுருக்கம்

மனித வாழ்விற்குக் கல்வி அவசியமாகும். இவற்றுள் பாடசாலைக் கல்வி முக்கிய இடத்தை வகிக்கின்றது. இக்கல்வியில் பலதரப்பட்ட பிரச்சினைகள் உள்ளன. "மாணவர் இடைவிலகல்" இதில் முக்கியமானதாகும். கல்வியில் இடைவிலகலானது இன்று எல்லா மட்டங்களிலும் உள்ளது. இது சர்வதேச, தேசிய ரீதியில் காணப்படும் ஓர் அடிப்படைப் பிரச்சினையாகும். இதன் காரணமாக பலதரப்பட்ட தீமைகள் உருவாகின்றன. இது பற்றிப் பல ஆய்வுகள் பால், மொழி, இன, வகுப்பு, பிரதேச, சமூக, புவியியல் ரீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில் சிரேஷ்ட இடைநிலை மட்டத்தில் (க.பொ.த. சாதாரணம்) தரம் 10,11 இல் மாணவர் இடைவிலகிச் செல்வதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றிற்கான தீர்வுகளை முன்வைக்கும் முகமாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மாணவரின் இடைவிலகலுக்கு பலதரப்பட்ட காரணிகள் இருந்தாலும் இந்த ஆய்வில் மாணவரின் தனிப்பட்ட, மற்றும் குடும்ப, பொருளாதார, பாடசாலைக் காரணிகள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாய்வின் சார்பிலக்கிய மீளாய்விற்காக உள்நாட்டு ஆய்வுகள் நான்கும், வெளிநாட்டு ஆய்வு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் காரணிகளை உறுதிப்படுத்தல், மாதிரி தெரிவு, தரவு சேகரிப்பு, ஆய்வு கருவிகள், பகுப்பாய்வு என்பன சம்பந்தமான முன்னறிவுகள் பெறப்பட்டன.

இவ்வாய்வை மேற்கொள்ள ஆய்வு வடிவமாக "அளவீட்டு ஆய்வு" தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆய்வுப் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மூன்று கல்வி வலயங்களுள் ஒன்றான, மட்டக்களப்பு கல்விவலயத்தில் அமைந்துள்ள ஆறு கோட்டங்களுள் காத்தான்குடிக் கோட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இக் கோட்டத்தில் மொத்தம் 16 பாடசாலைகள் உள்ளன. இவற்றுள் 05 பாடசாலைகள் சிரேஷ்ட இடைநிலை மட்டத்தைக் கொண்டவை. இந்தப் பாடசாலைகளில் 1999, 2000, 2001 ஆகிய ஆண்டுகளில் தரம் 10,11 இல் இடைவிலகிய 252 மாணவர்களில் 126 மாணவர்கள் எழுந்தமான முறையில் ஆய்வுக் காலத்தைக் கருத்திற் கொண்டு பாடசாலைக்கு 50% என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுள் வினாக்கொத்து வழங்கப்பட்டு மீளப் பெறப்பட்ட 110 மாணவர்களும், ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஐந்து பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலைக்கு ஒருவர் வீதம் ஐந்து பாடசாலைகளிலும் தரம் 10,11 இல் கற்பிக்கும் 05 ஆசிரியர்கள், பாடசாலைக்கு இருவர் வீதம் இடைவிலகிய மாணவர்களின் பெற்றோர் 10 பேரும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வு கருவிகளாக மாணவர் வினாக்கொத்து, அதிபர், ஆசிரியர், பெற்றோர் நேர்காணல் படிவம், பாடசாலைத் தினவரவு அறிக்கைகள் என்பன பயன்படுத்தப்பட்டன. இந்த ஆய்வு கருவிகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள், கல்வி முதுமாணிப் பட்டம் பெற்றவர்கள், இடைவிலகிய மாணவர்கள் ஆகியோரிடம் கொடுக்கப்பட்டு முன்னோடி ஆய்வு நடாத்தப்பட்டு அவற்றின் நம்பகம், தரம் என்பன உறுதிசெய்யப்பட்டன.

வினாக்கொத்து மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் அளவறி ஆய்வு முறையில் அடிப்படை புள்ளிவிபர முறை மூலம் மீடிறன் பரம்பல், நூற்றுவீதம் காணல் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதன் முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களின் நேர்முகம் காணல் மூலம் பெறப்பட்ட தரவுகள் ஒப்பிட்டு நோக்கப்பட்டன.

இம் முடிவுகளின் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் மாணவர்களின் இடைவிலகலுக்கு தனிப்பட்ட காரணிகள், குடும்பக் காரணிகள், பொருளாதாரக் காரணிகள், மற்றும் குடும்பம், பொருளாதாரம் என்பவற்றுடன் தொடர்பான சில சமூகக் காரணிகள் காரணமாக உள்ளன என்பதும், இவற்றில் பொருளாதாரக் காரணிகள் முக்கிய இடத்தை வகிப்பதும், பாடசாலைக் காரணிகளின் நிமித்தம் இடைவிலகல் ஏற்படுவதில்லை என்பதும் கண்டறியப்பட்டது.

கண்டறியப்பட்ட இவ்விடயங்களின் அடிப்படையில் சமூக நிறுவனங்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அரசு, பெற்றோர்கள் சார்பான ஆலோசனைகளும், எதிர்கால ஆய்வுக்கான முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.